பக்கங்கள் 17 + 09

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 15 புதன்கிழமை 31.07.2024 அதிர்வு 365

## நாமல் - சஜித் இரகசிய சந்திப்பு?



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ஷவுக் கும் ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைவரும்

04



# காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் வழங்கவே முடியாது!

## ‘மொட்டு’வின் நிலைப்பாடு இதுவே என்கிறார் நாமல்

இலங்கை அரசமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கு வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்ப்பை வெளியிடுகின்றது என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

04

# துப்பாக்கிகள், வாளுடன் மௌலவி ஒருவர் கைது!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச் சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பது றியா நகரில் மௌலவி ஒருவரை நேற்று இரவு இரண்டு ரி - 56 ரக துப்பாக்கிகள் மற்றும் ஒரு வாளுடன் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

பொலனறுவை - அரலகங்வில விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலனறுவை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விசேட அதிரடிப் படை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி வருன ஜெயசுந்தரவின் ஆலோசனைக்கமைய அரலகங்வில விசேட அதிரடிப் படையினர் சம்பவ தின மான நேற்று இரவு 10 மணிக்கு மேற்படி மௌலவியின் வீட்டைச் சுற்றிவளைத்துச் சோதனையிட்டனர்.





இதன்போது வீட்டில் மறைத்து வைக் கப்பட்டிருந்த இரண்டு ரி - 56 ரக துப் பாக்கிகள், 59 துப்பாக்கி ரவைகள், 2 மகசீன், 1 பைனோ, 1 வாள் ஆகியவற் றைக் கைப்பற்றியதுடன் மௌலவியை யும் கைது செய்தனர்.

04



# அர்ச்சுனாவுக்கு எதிரான ஐந்து வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஒத்திவைப்பு

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா மீதான வழக்குகள் இன்று புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி அ.யூட்சன் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

வைத்தியர்களைத் தொலைபேசியில் அச்சுறுத்தியமை, பேசித் தொந்தரவு செய்தமைஉள்ளிட்டகாரணங்களுக்காக வைத்தியர் அர்ச்சுனா மீது ஏனைய வைத்தியர்களால் தொடரப்பட்ட 5 வழக்குகளே இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இதன்போது வைத்தியர் அர்ச்சுனா சார்பாக சட்டத்தரணி செலஸ்டின் ஸ்டானிஸ்லாஸ் ஆஜராகியிருந்தார்.

வைத்தியர் அர்ச்சுனா ஊழல் – மோசடிகளைத் தடுக்கும் முகமாகவே கடமை நேரத்தில் வைத்தியர்கள் வெளியே செல்வதனைத் தடுத்திருந்தார் எனவும், வைத்தியர்கள் கடமை நேரத்தில் தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றிவிட்டு பின்னர் மேலதிக நேரக் கடமை என்ற பெயரில் மக்களின் வரிப்பணத்தைச் சூறையாடுகின்றனர் எனவும் சட்டத்தரணி தனது வாதத்தின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.




இதன்போது இரு தரப்பு விவாதங்களையும் கவனத்தில் எடுத்த நீதிபதி 5 வழக்குகளையும் எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதிக்குத் தவணையிட்டார்.

அதேநேரம் வைத்தியர் அர்ச்சுனா சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்து தனது தொலைபேசி மற்றும் பணத்தைப் பறித்தமைக்காக வைத்தியர்கள் மீது தொடுத்த வழக்கும் இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கவும், குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரையிலான ஒரு வாரம் சர்வதேச தாய்ப்பாலூட்டல் வாரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு சுகாதார அமைச்சால் தாய்ப்பாலூட்டல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து இந்த மதிப்பீடு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்முனை பிராந்தியத்திலுள்ள குழந்தைப்பேறு இடம்பெறுகின்ற சகல வைத்தியசாலைகளிலும் இந்த மதிப்பீடு ஆரம்பிக்கப்பட இருப்பதால் இது தொடர்பாக துறைசார்ந்த உத்தியோகத்தர்களை தெளிவூட்டும் வகையில் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை (30) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் கல்முனை பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆறு வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தாய்ப்பாலின் மகத்துவம், தாய்ப்பாலால் ஏற்படும் உடல், உள மற்றும் ஆத்மீக நன்மைகள், தாய்ப்பாலூட்டல் சம்பந்தமான சட்டகோவைகள், தாய் சேய் நேய வைத்தியசாலைக்குரிய 10 படிமுறைகள் எனும் தலைப்பில் விரிவுரையாற்றப்பட்டது.

அத்துடன் குறித்த வேலைத்திட்டத்தை இணையத்தின் ஊடாக மதிப்பீடு செய்வதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.என்.றொஷான்ந், டாக்டர் எப்.எம்.ஏ.காதர், பிராந்திய தாய்சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.எச்.றிஸ்பின், டாக்டர் ஏ.ஏ.யுரேன் ஆகியோர் இந்த நிகழ்வில் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்வானது சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.



# மன்னாரில் இரத்ததானம்!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மறை மாவட்டத்தில் பல்வேறு மனிதநேயப் பணிகளை ஆற்றிவரும் கரித்தாஸ் வாழ்வுதயம் நிறுவனம் வருடாந்தம் நடத்தி வரும் இரத்த தான முகாமானது நாளை வியாழக்கிழமை (01) காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2 மணி வரை மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாமில், இரத்த தானம் செய்ய ஆண், பெண் இருபாலாரும் முன்வந்து இந்த உயிர் காக்கும் உன்னத பணியில் பங்கெடுக்கும் படி ஏற்பாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# எரிபொருள் விலை திருத்தம்



எரிபொருள் விலை திருத்தம் வழமை போன்று இன்று நள்ளிரவில் இடம்பெறும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இன்று நள்ளிரவில் மாதாந்த எரிபொருள் விலை திருத்தம் இடம்பெறாது என வெளியாகியுள்ள செய்திகள் பொய்யானது எனவும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாகப் பரவும் செய்திகளில் உண்மைத்தன்மை இல்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இன்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலை குறையும் என்ற கணிப்பின்படி, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமை யாளர்கள் எரிபொருளை ஓர்டர் செய்யாத காரணத்தால் நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று வதந்திகள் பரவி வருகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# 4 பெண் தொழிலாளர்கள் குளவி கொட்டி பாதிப்பு!

(மஸ்கெலியா நிருபர்)

சாமிமலை, கவரவில்லை தோட்டத்தில் 200 ஏக்கர் பிரிவில் கொழுந்து கொய்துகொண்டிருந்த 4 பெண்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

குளவிக்கொட்டுக்கு இலக்கானவர்கள் சிகிச்சைக்காக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## நாமல்...

எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பு நடைபெற்றுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனியார் ஊடக நிறுவனமொன்றின் உரிமையாளரின் வீட்டிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று தெற்கு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவுக்கு ராஜபக்ஷ தரப்பின் நேரடி அல்லது மறைமுக ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தச் சந்திப்பை குறித்த ஊடக நிறுவன உரிமையாளர் ஏற்பாடு செய்துள்ளார் எனக் கூறப்படு கின்றது.

சஜித் பிரேமதாஸ வெற்றிக்காகப் பணம், ஊடக பலம் ஆகியவற்றைப் பிர யோகிக்கத் தயார் என்றும், சஜித் பிரேம தாஸவின் வெற்றியின் பின்னர், தனது சகோதரனை விடுதலை செய்ய வேண்டும் என்றும் சஜித் தரப்புடன் குறித்த ஊடக நிறுவன உரிமையாளர் பேரம் பேசியுள் ளார் எனவும் தெரியவருகின்றது.

தனது சகோதரனை விடுதலை செய்வ தற்கான பேரத்தை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவிக்கு வந்த பின்னர், தனியார் ஊடக நிறுவன உரிமையாளர் முன்வைத்த போதிலும், நீதிமன்றத் தீர்ப் பில் தலையிட முடியாது என்றும், அந்த விவகாரத்தை நீதிமன்றத்தின் ஊடாக கையாளுமாறும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இந்தநிலையில், ரணில் விக்கிரமசிங்க வைப் பதவி நீக்கி, புதிதாக ஆட்சிக்கு வரும் ஜனாதிபதியின் மூலம் இதனைச் சாதித்துக்கொள்ள மேற்படி ஊடக நிறு வன உரிமையாளர் திட்டம் தீட்டியுள்ளார்.

2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு ஆதரவளித்ததும் இந்த நிபந் தனையின் அடிப்படையில் என்பதுடன், கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்ற பின்னர், ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி குறித்த நபரின் தம்பியை விடுதலை செய்தமை மட்டுமன்றி, அவருக்கு வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பதவியையும் வழங்கினார்.

இந்தநிலையில், மீண்டும் நீதிமன்றத் தைப் பாதிக்கப்பட்ட தரப்பினர் நாடிய பின்னர், மேற்படி நபர் சிறையில் அடைக் கப்பட்டார்.

நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ தரப்பினர் சஜித் பிரேமதாஸவின் வெற் றிக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவும் பட்சத்தில் எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு வரவும், 2030ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ வெற்றி பெற உதவிகளைச் செய்யவும் குறித்த ஊடக நிறுவன உரிமையாளம் இணக்கம் வெளியிட்டுள்ளார். - என்றுள்ளது.

## காணி...

இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"இந்த விடயத்தை தெற்கைப் போன்றே வடக்கிலும் சென்று கூறி வருகின்றேன். சில தரப்பினரைப் போன்று வடக்கில் ஒன்றையும் தெற்கில் ஒன்றையும் நாங் கள் பேசப் போவதில்லை.

இதனால் வடக்கின் சில அரசியல் கட்சிகளினால் எம்முடன் இணைந்து செயற்பட முடியவில்லை. வடக்கின் ஒரு தொகுதி இளைஞர்கள் தற்போது காணி, பொலிஸ் அதிகாரம் என்ற கோரிக்கை யைக் கைவிட்டுள்ள நிலையில், தமிழ் - முஸ்லிம் இளைஞர்கள் தற்போது எங்களுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

எதிர்வரும் தேர்தல்களில் வடக்கைப் பிரதிநிதித்துவம் செய்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை உருவாக்குவது எமது இலக்கு.

அவ்வாறு தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சரவையிலும் அங்கம் வகிக்கலாம், ஒரு காலத்தில் அவர் பிரதமராகவோ அல்லது ஜனாதிபதியா கவோ கூடப் பதவி வகிக்கலாம்.


இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான எதிராளி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேம தாஸவே ஆவார்.

அத்துடன் எமது கட்சியிலிருந்து விலகி வெளியேறியவர்களைப் பிரதான சவாலாகவோ - எதிராளிகளாகவோ நாம் கருதவில்லை." - என்றார்.

## துப்பாக்கிகள்...

கைதான மௌலவி, மன்னம்பிட்டி விசேட அதிரடிப் படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத் தப்பட்டு வருகின்றார்.

அவரைக் கொழும்பிலுள்ள பயங்கர வாதத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இழுத்தடிப்பு ஏன்?

அரசியல், நிர்வாகம், சட்டம் - ஒழுங்கை நிலைநிறுத்திப் பராமரித்தல், ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஆகிய பல விவகாரங்களில் பொலிஸ்மா அதிபர் பதவி நிலை வெற்றிடம் காத்திரமாகத் தாக்கம் செலுத்தும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றின் உத்தரவினால் பொலிஸ்மா அதிபர் பதவி நிலை வெற்றிடமாகியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், பொலிஸ்மா அதிபர் அல்லது பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றை விடுக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் அல்லது பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கத் தேர்தல் ஆணைக் குழு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று செவ்வாய்க்கிழமை ஒன்றுகூடிய போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலை அறிவித்து அது தொடர்பான முனெடுப்புகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸ்மா அதிபரின் பதவி நீக்கம் நேரடியாகத் தாக்கம் செலுத்தாது எனவும் அவர் விளக்கியுள்ளார்.

ஆயினும், பொலிஸ்மா அதிபர் பதவியில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்கு விரைவில் தீர்வு காணுவது அவசியம் எனக் கோரிக்கை விடுப்பது என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று விசேடமாகத் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை உத்தியோகபூர்வமாக அறிவித்ததன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று செவ்வாய்க்கிழமைதான் கூடி நிலைமையை ஆராய்ந்திருக்கின்றது என்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

பொலிஸ்மா அதிபர் பதவியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து சபாநாயகரும், பிரதம நீதியரசரும் இணைந்து தீர்வு ஒன்றுக்கு வர வேண்டும் என இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தற்போது ஈரானில் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துக்கொள்வதற்காக ஈரானுக்கு பயணத்தை மேற்கொண்டுள்ளார். அவர் இலங்கை திரும்பியவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூலம் விசேட சந்திப்பொன்று நடத்தி செயற்பட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இப்போது கூறப்படுகின்றது.

இதற்கிடையில் -

பொலிஸ்மா அதிபரின் பதவி விவகாரத்தில் அரசியல் நோக்கத்திற்காகவே ஜனாதிபதி தீர்மானமொன்றை மேற்கொள்ளாமல் இழுத்தடிக்கின்றார் எனத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் வேட்பாளருமான அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

புல்நேவ பகுதியில் நேற்று விவசாயிகளைச் சந்தித்து கருத்துரைத்த போதே அவர்இதனைக்குறிப்பிட்டிருக்கின்றார்.

''பொலிஸ்மா அதிபரைப் பயன்படுத்தி அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முனைகின்றார். அதற்கு முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் அவருக்கு அவசியமாகவுள்ளார்'' எனக் குற்றம் சுமத்தியிருக்கின்றார் அநுரகுமார.

பொலிஸ்மா அதிபர் பதவி நிலை தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்று, அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்காமல், விவகாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுமென்றே இழுத்தடித்து வருகின்றமையை நோக்கும் போது அநுரகுமார திஸநாயக்கவின் இந்த குற்றச்சாட்டில் அடிப்படை இருப்பதாகவே தோன்றுகின்றது.




# சிறுவர் பிரச்சினைகளை அறிக்கையிடல் தொடர்பில் ஊடகவியலாளர் செயலமர்வு

**(எம். எப். றிபாஸ்)**

எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாத்தல் அமைப்பின் ஏற்பாட்டில், "சிறுவர் பிரச்சினைகளை அறிக்கையிடும்போது பின்பற்ற வேண்டிய நன்னெறி முறை" என்ற தலைப்பில், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான மூன்று நாள் வதிவிட செயலமர்வு மட்டக்களப்பு கல்லடியில் கிரீன் கார்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் வளவாளர்களாக மஹ்ரூப், கலாநிதி றஸ்மின், ஆகியோர் கலந்து கொண்டனர்.












# நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்காலச் செயலக செயலமர்வு

(எம். எப்.நவவாஸ்)

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் இடைக் காலச் செயலகத்தின் செயலமர்வு அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் பி.ரி.எம். இர்பான் தலைமையில் உதவி பிரதேச செயலாளர் கு.நஹீஜா முஷாபிர் ஆலோசனையில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட் வழிகாட்டலில் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். எம்.றிஸானின் நெறிப்படுத்தலில் தீகவாப்பி ரஜமஹா விகாரையில் நேற்று (30)செயலமர்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, தலைமைப் பொலிஸ் அதிகாரி டாக்டர் தங்கராசா சிரேஷ்ட ஆலோசகர் வஸ்னியா, ஜனாதிபதி செயலக இணைப்பாளர் கொத்தலாவல மற்றும் ரஜமஹா, பரிவர சைத்திய விகாராதிபதிகள் அட்டாளைச்சேனை ஜம்மியதுல் உலமா செயலாளர், திராய்க்கேணி ஆலய குரு, அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாயல் செயலாளர், தீகவாவி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச பொதுமக்கள் என பலரும் பங்கேற்றனர்.

இதன்போது பங்கேற்பாளர்கள் தங்கள் எண்ணங்கள் அனுபவங்கள் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க செயல்முறை தொடர்பாக பரிந்துரைகளை பகிர்ந்து கொண்டனர்.



# அஸ்வெசும பயனாளிகளை தெரிவு செய்யும் எண்ணீட்டாளர்களுக்கான பயிற்சி நெறி

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம பிரிவுகளில் அஸ்வெசும இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்குவதற்காகக் குடும்பங்களைத் தெரிவு செய்யும் எண்ணீட்டாளர்களுக்கான பயிற்சிநெறி அட்டாளைச் சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அதன் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹீஜா முஷாபிர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரிவு கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

தெரிவு செய்யும் முறைகள் தொடர்பான தெளிவுரைகள் நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஏ எல்.ஜெளபர் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் உதவியாளர் எச் எம். பாத்திமா சப்னா ஆகியோரால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ. எம். ஹமீட் மற்றும் பிரிவு அபிவிருத்தி உத்தியோதர்களான கி.ஜெயகரன், எம். இஷட். அஸ்வர், ஏ.றிபானா, ஜெ.பாஹிமா, எம் எச்.சர்ஜானா, எஸ் றீ.சித்தி ஜாயிஸா ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# தொழுநோய் பரவல் தொடர்பாக நிறுவனங்களிடையே கூட்டம்!

(பழுவூரான்)

தொழுநோய் தொடர்பாக நிறுவனங்களுக்கு இடையேயான மாவட்ட மட்டத்திலான ஒருங்கிணைப்புக் கூட்டம் மட்டக்களப்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோய் தாக்கத்தின் தற்போதய நிலைமை தொடர்பாகவும் இந்நோயை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் தெளிவூட்டப்பட்டது.

மாவட்டத்தில் காவேரி கலாமன்றத்தினரால் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியாக ஒப்பிடுகையில், மட்டக்களப்பு மாவட்டம் மூன்றாம் இடத்தில் உள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நோய்த் தாக்கத்தால் சிறார்கள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளமை தரவுகளின் அடிப்படையில் சுட்டிக்காட்டப்பட்டது.

தொழுநோயை பூரணமாக குணப்படுத்துவதற்கான மருத்துவம் தற்போது காணப்படுகின்ற போதும் மக்கள் மத்தியில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வின்மைமே இந் நோய் பரவுவதற்கான பிரதான காரணமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் போதுதொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவப் பகிர்வுகள் இடம் பெற்றன.

இந் நிகழ்வில் தொழுநோய் வைத்திய நிபுணர் திலினி விஜேயசேகர, பிரதி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எஸ். சரவணபவன், பிராந்திய தொற்று நோய் வைத்தியர் திருமதி கார்த்திகா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், கல்வி பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனத்தின பிரதிநிதிகள், இளைஞர் கழகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.










# விபுலானந்தர் அடிகளாரின் 77 ஆவது நினைவு நிகழ்வு

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அடிகளாரின் 77 ஆவது நினைவு நாளான நேற்று (30) திருகோணமலை உவர் மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தலைமை விருந்தினர் உரையின் போது விபுலானந்தர் அடிகளாரது கல்விப் பணி, ஆசிரியர் பணி, சொற்பொழிவுப் பணி, கலைச்சொல் ஆக்கப் பணி, மொழிபெயர்ப்புப் பணி, ஊடகப் பணி, ஆய்வுப் பணி, அரசியல் பணி ஆகியனவற்றை எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ரவி, திருகோணமலை பாடசாலைகளின் முன்னாள், இந்நாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கவிஞர்கள், தமிழ் ஆர்வளர் பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி விபுலானந்தர் அடிகளார் நூற்றாண்டு விழாச் சபையினரால் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவது தொடர்பாக ஒரு நாள் பயிற்சி பட்டறை நிகழ்வு

(மஸ்கெலியா நிருபர்)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையானது சமூக ஆர்வலர்களுக்கு பன்மைத்துவம் ஊடாக சேவைகளை வழங்குதல் மற்றும் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவது தொடர்பான ஒரு நாள் பயிற்சி பட்டறையை ஹட்டனில் ஏற்பாடு செய்திருந்தது.

சமயங்களுக்கிடையிலான நம்பிக்கைகளின் கருத்தியல் முரண்பாடுகள் காரணமாக சமூகத்தை சிக்கல் மற்றும் முரண்பாடான சூழ்நிலைகளில் இருந்து விடுவித்து நிலையான அமைதியை உருவாக்குவதற்காக "பன்மைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு சேவைகளை வழங்குதல் மற்றும் நிலையான அமை தியை கட்டியெழுப்புதல்" என்ற தலைப் பில் இந்தச் செயலமர்வு நேற்று (30) ஹட்டன் பகுதியில் நடைபெற்றது.

ஆசிரியர்கள், மருத்துவ மற்றும் சுகாதார பணியாளர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தோட்டங்கள் தொடர்பான சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சமூக ஆர்வலர்கள், தோட்டத் தலைவர்கள் மற்றும் இளம் சமூக ஆர்வலர்கள் ஆகியோரை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.

மதங்களுக்கு இடையில் நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல், கலாசார ரீதியாகவும் மொழி ரீதியாகவும் சம உரிமைகளை வழங்குதல் உள்ளிட்ட முரண்பாடுகளைக் குறைக்கும் நோக்கில் இலங்கை தேசிய சமாதான சபையால் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் ரவீந்திர சந்திரசிறி பள்ளியகுருகே வளங்களை வழங்கினர். இலங்கை தேசிய சமாதான சபையின் சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் மிஸ் அயெஷா ஜயவர்தன, திட்ட உத்தியோகத்தர் மிஸ் சாமினி வீரசிறி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் இரேஷா உதேனி மற்றும் ஏனைய அதிகாரிகள் பங்கு பற்றினர்.






# சதுரங்க போட்டியில் சாதனை!

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ் )

புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் தரம் 02 மற்றும் 03 ஐச் சேர்ந்த மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான திறந்த சதுரங்க போட்டியில் பங்குபற்றிய 36 மாணவர்களில் 27 மாணவர்கள் மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இதில் மாவட்டச் சம்பியனாக 07 வயதுக்கு உட்பட்ட பிரிவில் எம்.யூ. அஹமட் மற்றும் 09 வயதுக்கு உட்பட்ட பிரிவில் எம்.ஐ. உமைர் ஆகிய இருவரும் தெரிவாகி பாடசாலையின் வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் எம்.எம். ஹுதைபா தெரிவித்துள்ளார்.

# சாய்ந்தமருதில் படகுத் தரிப்புத்துறை அமைக்க பூர்வாங்க ஏற்பாடுகளை முன்னெடுக்க பணிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்ட மீனவர்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வரும் படகுத் தரிப்புத் துறையை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான இணை அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்றே அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதற்கான எழுத்து மூல கோரிக்கை மற்றும் திட்ட வரைபை கலாநிதி ஜெமீல் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் இயந்திரப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு இந்தப் பகுதியில் படகுத் தரிப்பிடம் ஒன்று இல்லாதிருப்பதால் அப்படகுகளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை படகுத் துறைமுகத்திலேயே நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது.

இதனாலக அவற்றின் உரிமையாளர்களும் மீனவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரப், அமைச்சராக பதவி வகித்த காலப் பகுதியில் சாய்ந்தமருதில் படகுத் தரிப்புத் துறை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

எனினும் ஒலுவில் பகுதியில் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதால் சாய்ந்தமருதில் படகுத்துறை அமைக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது.

ஆனால் ஒலுவில் பகுதியில் அமைக்கப்பட்ட துறைமுகம் பயன்பாட்டுக்கு உகந்ததாக அமையாத காரணத்தால் அங்கும் படகுகளை தரித்து வைக்கமுடியவில்லை.

இந்த நிலையில் பல தசாப்த காலமாக ஆழ்கடல் மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பாரிய சவாலான பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஐ.தே.க. அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான இணை அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான ஏ.எம். ஜெமீல், இவ்விடயத்தை ஜனாதிபதியின் நேரடி கவனத்துக்குக் கொண்டு சென்று, அதற்கான முன்மொழிவை சமர்ப்பித்திருந்தார்.

இதன் பிரகாரம் சாய்ந்தமருதில் படகுத் தரிப்புத் துறையை அமைப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதாக உறுதியளித்துள்ள ஜனாதிபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சாய்ந்தமருது முகத்துவாரம் அமைந்துள்ள பாலத்தை போதியளவு உயர்த்தி நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவ்வாறே முகத்துவார தோணாப் பகுதியை தேவையானளவு தோண்டி ஆழமாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கரையோரம் பேணல் திணைக்களத்திற்கு ஜனாதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# உலக இயற்கைப் பாதுகாப்பு தினத்தில் மட்டக்களப்பில் பொலித்தீன் அகற்றல்!

(பழுவூரான்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மட்டக்களப்பு மாவட்டப் பணிமனை மற்றும் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் உலக இயற்கைப் பாதுகாப்பு தினமான ஜுலை 28 “இயற்கையைப் கண்போல் பாதுகாப்போம், பொலித்தீன் அற்ற எமது நகரம்” என்ற தொனிப் பொருளில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அகற்றல் சிரமதானம் நடைபெற்றது.

மட்டக்களப்பு ஊறணிச் சந்தி முதல் கொத்துக் குளத்து மாரியம்மன் ஆலயம் வரையான வாவிக்கரை மற்றும் பிரதான வீதியின் இரு மருங்கிலும் காணப்பட்ட பெருமளவான பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் அகற்றப்பட்டன.

மாவட்டத்தின் சகல பாகங்களிலும் இருந்து வருகைதந்த 50 இளைஞர் யுவதிகளும் 16 உத்தியோகத்தர்களும் இந்தச் சிரமதான நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

மாவட்ட இளைஞர் கழக சம்மேளன செயலாளரும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியுமான மாணிக்கப் போடி சசிகுமாரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்தச் சிரமதான நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் திருமதி நிஷாந்தி அருள்மொழி, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி சதீஸ்வரி கிருபாகரன் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# கிழக்கு தாதிய உத்தியோகத்தர்களுக்கு அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிப்பட்டறை

(சியாத். எம். இஸ்மாயில்)

கிழக்கு மாகாண தாதிய உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிப்பட்டறை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தாதிய பணிப்பாளர் எம்.பி.சீ. சமன் மலின் வழிகாட்டலில் தாதிய பரிபாலகர் பீ.ரீ. நௌபர் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம். ஜவாஹிர் தலைமையில் இந்தப் பயிற்சிப் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இந்த நிகழ்வில், அனர்த்தம் சம்பந்தமான வைத்தியசாலையின் முன் ஆயத்த திட்டம், விபத்தின் போது அனர்த்த ஒருங்கிணைப்பு விதம், மருத்துவ உபகரணங்களின் முன் ஆயத்தம், அவசர நிலையில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்களிப்பு, ஆவணக் காப்பகமும், நோயாளர்களின் பொறுமதியான உடமைகள் பாதுகாப்பு, அவசர நிலைமைகளின் நோயாளர்களின் உள்வருகை, வெளிச் செல்ல திட்டம், பொது மக்கள் தொடர்பாடலும் ஊடக சந்திப்பும், சனநெரிசல் கட்டுப்பாடு தொடர்பான முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புக்களில் குழுக்களாக பிரிக்கப்பட்டு வளவாளர்களால் விரிவுரைகள் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சிப் பட்டறையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 50 தாதிய உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.





# வரலாற்று நிகழ்வுகளை இலகுவாக அறிந்து கொள்ள ‘பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம்’ மன்னாரில் !

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வரலாற்று நிகழ்வுகளை இலகுவாக அறிந்து கொள்ளும் வகையில் ‘எமது காலம்’ எனும் கருப்பொருளில் ‘பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம்’ மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் ஆவணப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கான செயற்றிட்ட நடவடிக்கை கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை (30) மன்னார் அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் பழைய மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஸ்கோப் அமைப்பின் திட்ட ஆலோசகர் சுஜான் நாணயக்கார, தேசிய பணிப்பாளர் நவாஸ் முகமட், குறித்த அமைப்பின் வரலாற்று கருத்தாடல் ஆலோசகர் தர்ஷிகா கதிர்வேல், திட்ட ஒருங்கிணைப்பாளர் முகமட் சுஹைல், திட்ட ஒருங்கிணைப்பாளர் தரிந்த மல்லவராச்சி, திட்ட முகாமையாளர் சௌமியா அமரசிங்க மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் உள்ளடங்களாக அழைக்கப்பட்ட திணைக்கள பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் மன்னார் நகரில் 8 நாள்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடு திட்டம் மற்றும் மன்னார் மாவட்டம் தொடர்பான வரலாறு, மற்றும் மன்னார் மாவட்ட எல்லைகள், மன்னார் மாவட்டத்தின் சிறப்பு, சமயம், கலாச்சாரம், பண்பாடுகள், கலை, இன்னும் பல்வேறு வரலாற்று சிறப்புகள் தொடர்பான ஆய்வுகள் தரவுகள் மற்றும் பல்வேறு தரப்பினர்களையும் அறிந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்தாடல் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலமும் வரலாற்று ரீதியான பதிவுகள் அறியப்படாத நிலையில் இந்த நிகழ்வின் ஊடாக மக்கள் பயன்பெறும் விதத்தில், மாணவர்கள் இலகுவாக அறிந்து கொள்ளும் விதத்தில் பயணிக்கும் அருங்காட்சியகம் முன்னெடுக்கும் படி மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் மன்னாரில் மத சகவாழ்வு செயலமர்வு

**(மன்னார் எஸ்.ஆர் லெம்பேட்)**

மன்னாரில் தேசிய சமாதானப் பேரவையால் முன்னெடுக்கப்பட்டுவரும் மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச சர்வ சமயக் குழுக்களுக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மத ரீதியான வன்முறைகளை தடுப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு மன்னாரில் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது.



தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் ஒழுங்கமைப்பில் மாவட்ட ரீதியாக இயங்கி வரும் சர்வ சமய குழுவினர் மற்றும் அரச உத்தியோகஸ்தர்களின் பங்குபற்றுதலுடன் தேசிய சமாதானப் பேரவையால் ஒழுங்கமைக்கப்பட்டு நிகழ்வு இடம்பெற்றது.

சமய சகவாழ்வு உட்பட மன்னார் மாவட்டத்தில் மத ரீதியாகக் காணப்படும் பிரச்சினை தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், தேர்தல் காலங்களில் மேற்கொள்ளப்படும் மத ரீதியான வெறுப்பு பேச்சை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்தச் செயலமர்வில் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன.

செயலமர்வில் மதகுருமார்கள், ஊடகவியலாலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# கேரள நிலச்சரிவு: சாவு அதிகரிப்பு

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தமிழர்கள் அறுவர் பரிதாபம்

## பலரின் நிலை திண்டாட்டம்

## இடைவிடாது தொடரும் மீட்பு



கேரளாவின் வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 163 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கோவையைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தமிழர்கள் அறுவர் பலியாகியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

கன மழை பெய்து வந்த நிலையில், கேரள மாநிலம் வயநாட்டில் நேற்று அதிகாலை 2 மணியளவில் திடீரென அடுத்தடுத்து பயங்கர நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இந்த நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 163 ஐ தாண்டியுள்ளது.

இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர். 500 பேரின் கதி என்ன? என்பது தெரியாத நிலையில், மீட்புப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதேவேளை, வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த தமிழர்களின் எண்ணிக்கை 9 என அறியமுடிகின்றது. தமிழ்நாட்டைச் சேர்ந்த காளி தாஸ், கல்யாண குமார், ஷிஹாப் என மூவரின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், கோவை மாவட்டம் வால்பாறையைச் சேர்ந்த 6 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் 6 பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, வயநாட்டில் மீண்டும் நிலச்சரிவு ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# திருமாவுக்கு பிடியாணை



விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுக்கு பிடியாணை பிறப்பித்து மயிலாடுதுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கண்டித்து திருமாவளவன் தலைமையில் பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணியில் கலவரம் ஏற்பட்டது.

இதையடுத்து கலவரம் தொடர்பாக மயிலாடுதுறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கில் ஆஜராகும்படி திருமாவளவனுக்கு நீதிமன்றம் சம்மன் அனுப்பி இருந்தது. ஆனால் திருமாவளவன் வழக்கில் ஆஜராகாமல் இருந்து வந்தார்.

இந்நிலையில், இன்று வழக்கை விசாரித்த நீதிபதி ஆர்.விஜயகுமாரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுக்கு பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார்.

வழக்கில் சம்மன் அனுப்பியும் திருமாவளவன் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்தது மற்றும் வழக்கறிஞர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தால் அவரது தரப்பு வழக்கறிஞர்கள் மனுத்தாக்கல் செய்யாமல் இருந்தது உள்ளிட்ட காரணங்களைச் சுட்டிக்காட்டி இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வழக்கு விசாரணை ஆகஸ்ட் 27ஆம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# ஈரானில் வைத்து ஹமாஸ் தலைவர் படுகொலை!





ஹமாஸ் ஆயுதக்குழுவின் தலைவராகச் செயல்பட்டு வந்த இஸ்மாயில் ஹனியே. ஈரானில் வைத்து இன்று படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள அவரது வீட்டில் வைத்தே இஸ்மாயில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இஸ்மாயிலுடன் அவரது உதவியாளரும் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இஸ்மாயிலைக் கொலை செய்தது யார்? சம்பவம் எவ்வாறு நடைபெற்றது? என்பது குறித்த எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவில்லை.

இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி பாலஸ்தீனத்தின் காசா முனையை ஆட்சி செய்யும் இஸ்மாயில் ஹனியே தலைமையிலான ஹமாஸ் ஆயுதக்குழுவினர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஆயிரத்து 139 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் பணயக் கைதிகளாக காசாவிற்குச் கடத்திச் செல்லப்பட்டனர்.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்தத் தாக்குதலில் 38 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, ஹமாஸ் ஆயுதக்குழுவின் தலைவர்கள் உள்பட குழுவில் இடம்பெற்றுள்ள அனைவரும் கொல்லப்படுவர் என்று இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

தற்போது ஹமாஸ் ஆயுதக்குழுவின் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





## அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யா தலையீடு:

# நகைச்சுவை

## எனக்கூறி ரஷ்யா மறுப்பு

"அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு உள்ளது" என அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளமை குறித்துப் பதிலளித்துள்ள ரஷ்யா, இதைக் கேட்பதற்கே 'நகைச்சுவை'யாக உள்ளது எனக் கூறி மறுத்துள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் குடியரசுக் கட்சி வேட்பாளராக 78 வயதுடைய முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார். இதேபோன்று, ஜனநாயகக் கட்சி வேட்பாளராக துணை அதிபர் கமலா ஹறிஸ் போட்டியிடுகிறார்.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்க உளவுப் பிரிவு அதிகாரிகள் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இதுகுறித்து வெளியான செய்தியில்,

"நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யா செல்வாக்குச் செலுத்தத் திட்டமிட்டு உள்ளது. இதற்காக, ரஷ்யாவை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் நிறுவனங்களை அந்நாடு பயன்படுத்தியுள்ளது. அமெரிக்க மக்களின் கருத்துகளை வடிவமைக்கும் நோக்கில் ரஷ்யா செயல்படுகிறது" என அமெரிக்க உளவுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து ரஷ்யாவின் கிரெம்ளின் அரண்மனையின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறும்போது,

"இது முற்றிலும் அபத்தம். கேட்பதற்கே நகைச்சுவையாக உள்ளது. இத்தகைய குற்றச்சாட்டுகளை நாங்கள் முற்றிலும் மறுக்கிறோம்" எனக் கூறியுள்ளார்.

ரஷ்யாவை ஓர் எதிரியாகக் காட்ட, அமெரிக்க உளவுப் பிரிவு அதிகாரிகள் முயற்சித்துள்ளனர். அமெரிக்கத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் இதுபோன்று பல அறிக்கைகள் வெளிவரும்.

ஏனெனில், குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சியினர் என இருவரும், அரசியல் போராட்டத்தில், அதுவும் தேர்தல் பிரசாரத்தின்போது, சுயநலத்திற்காக தனிப்பட்ட முறையில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முக்கிய காரணிகளாக ரஷ்யாவும், அதன் தலைமையும் உள்ளது" என்றும் பெஸ்கோவ் கூறியுள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 9

புதன்கிழமை 31/07/2024

## மக்களைத் திசை திருப்பி நூதன முறையில் களவுகள்

**பொலிஸார் எச்சரிக்கை**

ஒன்ராரியோ, ஜூலை 31

ரொறன்ரோவில் இடம்பெற்று வரும்திருட்டுசம்பவங்கள்தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

C2



# பிரிட்டிஷ் கொலம்பியாவின் மெரிட்டில் விமான விபத்தில் இரண்டு பேர் மரணம்



பிரிட்டிஷ் கொலம்பியாவில் மெரிட் பகுதியில் இடம் பெற்ற விமான விபத்து சம்பவம் ஒன்றில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் ஒரு விமானியும், ஒரு விமானப் பயணியும் உயிரிழந்துள்ளனர்.

விமான நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் விமானத்தின் சிதைவுகள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமான விபத்துக்கான காரணங்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கனடிய போக்குவரத்து பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

இந்த விமான விபத்து தொடர்பில் தகவல்கள் இருந்தால் வழங்குமாறு பொதுமக்களிடமும் கோரப்பட்டுள்ளது.

# துணைப் பிரதமர் கிறிஸ்டியா ப்ரீலேன்ட் அரசியலில் இருந்து வெளியேற மாட்டார்

**அடித்துக் கூறுகின்றார் லிபரல் எம்.பி.**

**ஒன்ராரியோ, ஜூலை 31**

துணைப் பிரதமர் கிறிஸ்டியா ப்ரீலேன்ட் அரசியலில் இருந்து வெளியேறக்கூடும் என்ற சமீபத்திய ஊடக செய்திகளை லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நிராகரித்தார்.

இந்தச் செய்திகளை வெறும் ஊகங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் மெலனி விவரித்தார்.

துணை பிரதமருக்கான ஆதரவு லிபரல் கட்சி நாடாளுமன்ற குழுவின் அனைத்து உறுப்பினர்களிடம் உள்ளது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி கூற முடியும் என ஜேம்ஸ் மலோனி தெரிவித்துள்ளார்.

C2








# ஒன்ராரியோவில் வாகன கொள்ளைகளைத் தடுக்க ஐந்து ஹெலிகளை வாங்குகின்றனர் பொலிஸார்!

**ஒன்ராரியோ, ஜூலை 31**

ஒன்ராரியோ மாகாணத்தில் இடம் பெற்று வரும் கொள்ளைச் சம்பவங் களை தடுத்து நிறுத்தும் நோக்கில் பொலிஸார் ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்ய உள்ளனர்.

ஒட்டாவா மற்றும் டொரன்ரோவில் இந்த ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத் தப்பட உள்ளன.

குறிப்பாக இந்த இரண்டு நகரங்க ளிலும் இடம்பெறக்கூடிய வாகன கடத்தல் மற்றும் வாகன கொள்ளைச் சம்பவங்களை தடுக்கவே இவ்வாறு ஹெலிக்கொப்டர் கொள்வனவு செய்யப்பட உள்ளது.

ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் 134 மில்லியன் டொலர் செலவில் ஐந்து ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்ய உள்ளது.

ரொறன்ரோ பெரும்பாகம் மற்றும் ஒட்டாவாவில் இந்த ஹெலிக்கொப் டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன என மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொள்ளைச் சம்பவங்களின் போது பொலிஸாருக்கு உதவும் நோக்கில் இந்த ஹெலிக்கொப்டர்கள் கொள்வ னவு செய்யப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒட்டாவாவில் இந்த ஆண்டில் இதுவரையில் 957 வாகனங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

ஒன்றாரியோவில் ஒவ்வொரு 14 நிமிடத்திற்கு ஒரு தடவையும் வாகனம் கொள்ளையிடப்படுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

---

**மக்களை...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மக்களைத் திசை திருப்பி திட்டமிட்ட அடிப்படையில் களவுகள் தொடர்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான இரண்டு திருட்டுச் சம்பவங்கள் சிசிடிவி காணொளி மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

உதவிகள் செய்வது போன்று அரு கில் வந்து கவனத்தை திசை திருப்பி பணப்பைகள் போன்றன திருடப்படு கின்றன எனப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அவர்கள்அறிவுறுத்தல் வழங்கி யுள்ளனர்.

உதவுவதற்கு சென்றவர்கள் இவ் வாறு திருட்டுச் சம்பவங்களில் பாதிக்க நேரிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின் றது.

---

**துணைப் பிரதமர்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

துணைப் பிரதமருக்கும் பிரதமர் அலு வலகத்திற்கும் இடையிலான 'பதற்றம்' குறித்த ஊடக அறிக்கைகளின் பின் னணியில் அவரது கருத்துக்கள் வெளி யாகின.

முன்னாள் கனடிய மத்திய வங்கி யின் ஆளுநர் மார்க் கார்னேயை ப்ரீலேண்ட்டுக்கு மாற்றாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கருதுகிறார் எனவும் ஊடக அறிக்கைகள் வெளியாகியி ருந்தன.

அரசியலில் ஈடுபடுவது குறித்து மாரக் கார்னேயுடன்டன் பேசி வருவதை பிரத மர் ட்ரூடோ அண்மையில் உறுதிப் படுத்தினார் என்பது குறிப்பிடத்தக் கது.

# கனடாவின் முதற்குடிப் பெண்

# பிரபஞ்சப் பேரழகியாகத் தெரிவு




அல்பேர்ட்டா, ஜுலை 31

பிரபஞ்சப் பேரழகி கனடா பட்டத்தை வெற்றி பெற்ற முதல் முதற்குடி பெண் என்ற பெருமையை அஷாலி கோலிங்புல் பெற்றுள்ளார்.

அல்பேர்ட்டாவின் எனோக் க்ரி முதற் குடியைச் சேர்ந்த அஷாலி கோலிங்புல், ஜுலை 28ஆம் திகதி பிரபஞ்சப் பேரழகி யாக முடிசூட்டப்பட்டார்.

'இந்த மகத்தான சாதனை கனடா வின் வளமான கலாசார பன்முகத் தன்மை, முதற்குடி சமூகங்களை கொண்டாடு கிறது' என பிரபஞ்ச பேரழகி கனடா ஒழுங் கமைப்புக் குழு கூறியுள்ளது.

34 வயதான அஷாலி கோலிங்புல், 28 வயதுக்கு மேற்பட்ட முதல் பெண், பிரபஞ்ச பேரழகி கனடா பட்டத்தை வெற்றி பெற்ற முதல் திருமணமான பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

# இடைத்தேர்தல்கள் தொடர்பிலும் விசேட கண்காணிப்பு நடவடிக்கை



கனடாவில் எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய அனைத்து வகையான இடைத்தேர்தல்கள் தொடர்பிலும் விசேட கண்காணிப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடியப் புலனாய்வு படையணி இந்த தேர்தல்களை கண்காணிக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கம் இது தொடர்பில் அறிவித்துள்ளது.


தேர்தல்களில் வெளிநாட்டு தலையீடு மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொது தேர்தல்கள் மட்டுமின்றி இவ்வாறான இடைத்தேர்தல்களின் போதும் வெளிநாட்டு தலையீடுகளை குறித்து கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லீபிலென்க் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் மனிடோபா மற்றும் கியூபெக் ஆகிய தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த இடைத்தேர்தல்களின் போதும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் இறுதியாக நடைபெற்ற இரண்டு பொது தேர்தல்களின் போது வெளிநாட்டு தலையீடு மேற்கொள்ளப்பட்டது எனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் கார் விபத்தில் இந்திய இளம்பெண் பலி

சமீபத்தில் இந்தியாவில் திருமண நிச்சயதார்த்தம் முடித்து கனடா சென்ற இந்திய வம்சாவளி இளம்பெண் ஒருவர் கார் விபத்தில் பலியானார்.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலுள்ள பட்டியாலா என்னும் இடத்தைச் சேர்ந்த சுயளாயஅனநநி முயரச (23) என்னும் பெண்ணுக்கு, நான்கு மாதங்களுக்கு முன் தான் இந்தியாவில் நிச்சயதார்த்தம் முடிந்துள்ளது.

கல்வி கற்பதற்காக நான்கு ஆண்டுகளுக்கு முன் கனடா வந்த Rasham deep, படிப்பை முடித்து பணி அனுமதி பெற்று பணி செய்துவந்தார்.

இந்நிலையில், அவரும், அவரது தோழி உயசஅயெ மற்றும் Harman உடைய சகோதரரான Navjot ஆகியோர் தங்கள் நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கான விண்ணபத்தை அளித்துவிட்டு டாக்ஸி ஒன்றில் தாங்கள் தங்கியிருந்த அறைக்கு திரும்பிக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

அப்போது எதிர்பாராதவிதமாக திடீரென காரின் டயர் ஒன்று வெடிக்க, கட்டுப்பாட்டை இழந்த கார் தூக்கி வீசப்பட்டு உருண்டு சென்று விழுந்துள்ளது.

இந்த விபத்தில் சுயளாயஅனநநி, அவரது தோழி Harman மற்றும் Harmancila சகோதரரான Navjot ஆகிய மூவரும் உயிரிழந்துவிட்டார்கள்.

மூன்று பிள்ளைகளை இழந்த பட்டியாலா கிராமம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

அதுவும், நிச்சயதார்த்தம் முடித்து, நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கான விண்ணப்பமும் அளித்து, நல்ல எதிர்காலத்துக்காக எதிர்பார்த்திருந்த நிலையில் சுயளாயஅனநநி உயிரிழந்தமையால் அவரது குடும்பத்தினர் கடும் அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்ந்துள்ளார்கள்.



# பரிஸ் ஒலிம்பிக்ஸில் கனடாவுக்கு இதுவரையில் ஆறு பதக்கங்கள்!

**ஒன்ராரியோ, ஜுலை 31**

2024 ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

பெண்களுக்கான ரக்பி செவன்ஸ் பிரிவில் கனடா நேற்று வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

நியூசிலாந்து அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் கனடா 19 க்கு 12 என்ற கணக்கில் தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில் கனடா வெற்றி அடைந்திருந்தால் தங்கப் பதக்கத்தை வெற்றி பெற்றிருக்கும்.

இந்த ஆட்டத்தில் தோல்வியடைந்த மூலம் கனடா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

இது பரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடா வெற்றி பெறும் ஆறாவது பதக்கமாகும்.

இதுவரை பரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடா இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலம் என மொத்தம் ஆறு பதக்கங்களை வெற்றி பெற்றது.

# ஒலிம்பிக்ஸ் பாதுகாப்புப் பணியில் கனடிய காவல்துறையினர் 16 பேர்

2024 பரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடிய பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முறை ஒலிம்பிக்ஸ் பாதுகாப்பு பணியில் 44 நாடுகளை சேர்ந்த 1,800 பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் கனடிய பொலிஸாரும் அடங்குகின்றனர்.

ஒலிம்பிக்ஸ் பாதுகாப்பில் புலனாய்வு உட்பட்ட பணிகளில் 16 கனடிய காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் 12 பேர் கியூபெக் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.








# வெனிசுவேலா ஜனாதிபதித் தேர்தலின் விரிவான முடிவுகளை வெளியிடுங்கள்!

## அந்நாட்டு அதிகாரிகளிடம் கனடா கோரிக்கை

**ஒன்ராரியோ, ஜூலை 31**

ஜனாதிபதித் தேர்தலின் விரிவான வாக்கெடுப்பு முடிவுகளை வெளியிட வெனிசுவேலா அதிகாரிகளுக்கு கனடா அழைப்பு விடுத்துள்ளது.


இரண்டு பிரதான வேட்பாளர்களும் தேர்தலில் தாங்களே வெற்றி பெற்றனர் என்று கூறியுள்ள நிலையில் கனடாவின் இந்தக் கோரிக்கை வெளியானது.

மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் விரிவான முடிவுகளை வெளியிடுமாறு கனடிய வெளிவிவகார அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியும் இதே கோரிக்கையை முன்வைத்தது.

ஜனநாயக வாக்கெடுப்பு சுதந்திரமாகவும் நியாயமாகவும் இருந்தால் மட்டுமே கனடா அதை அங்கீகரிக்க வேண்டும் என கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பியர் பொய்லியேவ் கூறியுள்ளார்

இந்த விடயத்தில் ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளுடன் கனடா கூட்டு சேர்ந்து செயல்படுவதாக துணைப் பிரதமர் கிறிஸ்டியா ப்ரிலேண்ட் தெரிவித்துள்ளார்.



# லெபனானில் வசிக்கும் கனடியர்களை வெளியேற கோருகின்றது கனடிய வெளிவிவகார அமைச்சு!

**ஒன்ராரியோ, ஜூலை 31**

லெபனானில் வசிக்கும் கனடியர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கனடிய வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளது.

மேற்கத்திய நாடுகளுடன் இணைந்து கனடிய அரசாங்கம் தமது குடிமக்களுக்கு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.


லெபனானை விட்டு வெளியேற அல்லது அங்கு பயணத்தை தவிர்க்க மேற்கத்திய நாடுகள் பல கோரியுள்ளன.

இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையே அதிகரித்து வரும் பதற்றங்கள் போராக மாறக்கூடும் என்ற அச்சத்தின் மத்தியில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் பயண எச்சரிக்கை விடுத்துள்ளன.

லுப்தான்சா, எயார் பிரான்ஸ், யூரோ விங்ஸ் போன்ற பல ஐரோப்பிய விமான நிறுவனங்கள் பெய்ரூட் சர்வதேச விமான நிலையத்திற்கான விமான சேவைகளை இரத்து செய்துள்ளன.

தற்போது லெபனானில் உள்ள கனடியர்களை வெளியேற்றும் நடவடிக்கை எதுவும் நடைபெறவில்லை என கனடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.



# குறுகிய கால வாடகை வீடுகளின் எண்ணிக்கை கனடாவில் உயர்வு

**ஒன்ராரியோ, ஜூலை 31**

குறுகிய கால வாடகை வீடுகளின் எண்ணிக்கை கனடாவில் 2017ஆம் ஆண்டு முதல் அதிகரித்துள்ளது.

கனடிய புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்ட புதிய அறிக்கையில் இந்த விவரம் உள்ளது.

கனடாவில் மொத்த குறுகிய கால வாடகை வீடுகளின் எண்ணிக்கை 2017 முதல் 2023 வரையிலான காலத்தில் 60 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்த வாடகை வீடுகளை நீண்ட கால உபயோகத்திற்கான வீடுகளாகப் பயன்படுத்தக்கூடிய நிலை உள்ளதாக கூறப்படுகிறது.



# சிறப்புற நடந்த Pradeep kumar Live



Sv media - Tamil one tv ஒழுங்கு செய்த Pradeep kumar Live in Toronto கடந்த சனிக் கிழமை (27.07.2024) Canada event centre இல் சிறப்பாக நடைபெற்றது







